நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றம், திண்டுக்கல்.,
முன்னிலை: திரு.S.பாக்கியராஜ், பி.எஸ்சி, பி.எல்
நீதித்துறை நடுவர் எண்.1, திண்டுக்கல்.
2025 ம் ஆண்டு, அக்டோபர் மாதம், 06–ம் நாள், திங்கட்கிழமை,

M.P.No.7/2025

in

STC.No. 79/2025

வழக்கின் தரப்பினர்களின் பெயர் விவர குறிப்பு

A1–சுப்புலெட்சுமி, 55
க/பெ.சந்திரசேகரன்,
க.எண்.4/578–1,
திருமலைகேணி நகர்,
கலெக்ட்ரேட் அஞ்சல்,
திண்டுக்கல்.

A2–சுப்புலெட்சுமி காண்ட்ராக்டர்,
க.எண்.28, AKMG நகர்,
ஆக்ஸிஸ் வங்கி அருகில்,
பழைய கரூர் ரோடு,
திண்டுக்கல். .... மனுதாரர்/எதிரி

திரு.T.ராஜாசிதம்பரம்,
த/பெ.N.தீர்த்தம்,
க.எண்.16E, E பிளாக், இரண்டாவது தெரு,
M.V.M. நகர்,
திண்டுக்கல். . . . . எதிர்மனுதாரர் /முறையீடுதாரர்

இம்மனுவானது கடந்த 03.09.2025 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.V.நாகராஜன் அவர்கள் ஆஜர் ஆகியும்,

மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.பத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## உத்தரவு

மனுதாரர்/எதிரி தரப்பில் காசோலையை வல்லுநர் கருத்துரைக்காக தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டி பிரிவு 45 (39 BSA) இந்திய சாட்சிய சட்டத்தின் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

மனுதாரர்/1 ம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் எதிர்மனுதாரர்/புகார்தாரர் தன் மீது தான் அவரிடம் கடன் பெற்றதாகவும், அதை திரும்ப செலுத்தும் விதமாக காசோலை வழங்கியதாகவும், அந்த காசோலை வங்கியில் செலுத்தப்பட்டு மதிப்பு மறுக்கபட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தான் எதிர்மனுதாரர்/புகார்தாரரிடம் கடன் ஏதும் வாங்கவில்லை என்றும், முறையீடுதாரரால் வழங்கப்பட்ட காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், அதனை வேறு கையொப்பங்களுடன் ஒப்பீடு செய்தால் உண்மை தன்மை தெரிய வரும் என்றும், எனவே, அதில் உள்ள கையொப்பத்தை பொறுத்து வல்லுநர் கருத்துரைக்கு தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் உரையின் சுருக்கம்**

எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் மனுதாரர்/எதிரி அனுப்பிய பதிலறிவிப்பு காசோலையில் உள்ள கையொப்பம் பற்றி எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றும், மாறாக காசோலையை மனுதாரர்/எதிரியின் மகனான ஸ்ரீராம் முறையீடுதாரர்/எதிரிமனுதாரரரிடம் கொடுத்து வைத்தாக அவரே ஒத்து கொள்வதாகவும், மேலும் இவ்வழக்கினை காலதாமதம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் குறிப்பிடபட்டுள்ளது.

**3) தீர்மானிக்கப்படவேண்டியவை**

**மனுதாரர் கோரியவாறு இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதுவே ஆகும்.**

மனுதாரர்/எதிரி தரப்பில் காசோலையிலுள்ள கையொப்பம் மனுதாரர்/எதிரியினால் செய்யப்பட்டவை இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கு.வி.மு.ச.251 கீழான விசாரணையின் போது **"பொய் வழக்கு"** என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்/எதிரி தரப்பில் அனுப்பப்பட்ட பதிலறிவிப்பில் காசோலையை கையெழுத்து மட்டும் செய்து தன் மகனிடம் தொழில் சம்பந்தமாக கொடுத்து வைத்திருந்தார் எனவும், எதிரி கணக்கிற்கு வந்த தொகையானது புகார்தாரர் பெற்ற கடன் தொகையில் ஒரு பகுதி எனவும், புகார்தாரரை தனக்கு தெரியாது எனவும், அவரிடமிருந்து கடன் எதுவும்

பெறப்படவில்லை எனவும் என குறிப்பிட்டு அனுப்பப்பட்டுள்ளது. வழக்கு காசோலையானது **Exceeds Arrangement** என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது. கையெழுத்து மாறுபாடு என குறிப்பிட்டு திருப்பப்படவில்லை. அவ்வாறான நிலையில் காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என குறிப்பிட்டு மனு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இம்மனு மனுதாரர்/எதிரிக்கு எதிராகவும் எதிர்மனுதாரர்/புகார்தாரருக்கு ஆதரவாகவும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**எனவே இந்த மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது,**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு என்னால் இன்று **06.10.2025** அவை அறிய பகரப்பட்ட உத்தரவு.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.10.06 18:33:27 +0530

நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம்
திண்டுக்கல்.

1. மனுதாரர்/எதிரி தரப்பு சாட்சியம் சான்றாவணங்கள் எதுவும் இல்லை.
2. எதிர் மனுதாரர்/புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள் எதுவும் இல்லை.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.10.06 18:33:31 +0530

நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம்
திண்டுக்கல்